## APPENDIX I

[*Vide* Answer to Starred Question No. 43]

(அ) ஆம். (ஆ) இல்லை. (உ) 1947-49-ஆம் ஆண்டில் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி முறை. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட அனுபவத்தையும், நிறைவேற்றுவதில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் கருத்தில்கொண்டு 1951, 1953, 1961, 1963-ஆம் ஆண்டுகளில் மாற்றியமைக்கப்பட்டது.

கைவினைப் பணிப் பயிற்சியில் கடந்த காலத்தில் அதிக கால அளவு ஒதுக்கப்பட்டது என்றும், கற்பிக்கும் திறமையை மேம்பாடு செய்ய சிறிதளவு கால அளவே ஒதுக்கப்பட்டது என்றும் கருதப்பட்டது. ஆதாரக் கல்வியில் அனுபவம் பெற்ற அறிஞர்களால் இது பன்முறை சுட்டிக் காட்டப்பட்டது. ஆதாரப் பயிற்சிப் பள்ளிப் பாட முறையை மாற்றியமைப்பதற்கான அவசியம் 1962-ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்காக வல்லுநர் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. இக்குழுவினால் இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட பாட முறை 17--7--63 அன்று அரசின் ஒப்புதலைப் பெற்றது. கடந்த காலத்தில் நாட்டம் செலுத்தப்பட்டதைவிட கற்பிக்கும் முறைகளுக்கு இப்பாட முறை சிறப்பிடம் தருகின்றது. மேலும் கற்றுக் கொள்வதற்குப் பாடநூற்களைப் பயன்படுத்துவது அவசியமென்று வகை செய்வதுடன்கூட செய் விளக்க முறைப் பாடங்களுக்கும் கற்பிப்பதில் பயிற்சி பெறுவதற்கான நடைமுறைக்கும் சிறப்பிடமளிக்கின்றது. கைவினைப் பணியைப் பொறுத்தவரையில் துணி உற்பத்திக் கைவினைப் பணிகளிலிருந்து உணவு உற்பத்திக் கைவினைப் பணிகள் முக்கிய பணிகளாகச் சிறப்பிடமளிக்கப்பட்டுள்ளன.

ஆதாரப் பயிற்சிப் பள்ளித் திட்டத்திலும், பாடத் திட்டத்திலும், அவ்வப்பொழுது செய்யப்பட்ட மாற்றங்கள் மாறுதல்களின் தன்மையைக் கீழ்க்காணும் விவர அட்டவணையில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | செயற்கு கொண்டு வரப்பட்ட காலம் (3) | முதல் தேர்வு நடத்தப்பட்ட காலம் (4) | தேர்வுப் பாடங்கள் — இளநிலை (5) | தேர்வுப் பாடங்கள் — முதுநிலை (6) | குறிப்புகள் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பழைய திட்டம் | 1947-49 | மார்ச் 1949 | 1. சிறுவர் மன ஆய்வு.<br>2. ஆதாரக்கல்வியின் கோட்பாடுகளும் நடைமுறைகளும். | (இளநிலைக்குரிய பாடத் திட்டமே ஆகும்.) | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | 3. கிராம இயலும், குடியுரிமைப் பயிற்சியும்.<br>4. பல்வேறு பள்ளி நடவடிக்கைகள் பற்றிய கோட்பாடு. | | |
| 2. | திருத்திய திட்டம் | 1951-52 | மார்ச் 1953 | 1. மொழியும், மொழி இலக்கியமும்.<br>2. கல்வி, உளவியல், சிறுவர் மன ஆய்வு.<br>3. பள்ளி நிர்வாகம்.<br>4. குறிப்பாக ஆதாரக் கல்வியையொட்டி கல்விக் கோட்பாடுகள்.<br>5. பயிற்சி முறைகள். | 1. மொழியும், இலக்கியமும்.<br>2. கல்வி, உளவியல், சிறுவர் மனஆய்வு.<br>3. பள்ளி நிர்வாகம்.<br>4. கல்விக் கோட்பாடுகள்—குறிப்பாக ஆதாரக் கல்வியையொட்டி.<br>5. பயிற்சி முறைகள்.<br>6. ஆங்கிலம் (நடை முறைகள்) | 1. மொழியும், மொழி இலக்கியமும்.<br>2. கல்வி, உளவியல், சிறுவர் மனஆய்வு.<br>3. பள்ளி நிர்வாகம்.<br><br>இத்திட்டத்தின்படி முதுநிலை பயிற்சி மாணவர்களுக்கு கூடுதலாக ஒரு பாட முறை (ஆங்கில முறை) சேர்க்கப்பட்டுள்ளது. |
| 3. | தனிப்பட்ட திட்டங்கள் | 1953-55 | மார்ச் 1955 | 1. கல்வி, உளவியல், சிறுவர் மன ஆய்வு.<br>2. ஆதாரக்கல்வி, பள்ளி நிர்வாகம் பற்றிய கோட்பாடுகள்.<br>3. கல்வி கற்பிக்கும் முறைகளும், பொது மொழிகளும். | 1 முதல் 3 வரை இளநிலைக்குரியன<br>4. ஆங்கிலம் கற்பிக்கும் முறை. | கல்வித் துறை இயக்குநரின் 14-8- நாளிட்ட 153 ஆர். ஸி. எண் 497/53 எண்ணுள்ள நடவடிக்கைக் குறிப்புகளுடன், கல்வித்துறையின் 6-8-53 நாளிட்ட 2811 ஸி/53-3 எண்ணுள்ள அரசு குறிப்பாணையின் நகல் அனுப்பப்பட்டது |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 4. | 1961 திட்டம் | 1961-63 | மார்ச் 1963 | 1. கல்வி உளவியல், சிறுவர் மன ஆய்வு.<br>2. ஆதாரக் கல்வி, பள்ளி நிர்வாகம் பற்றிய கோட்பாடுகள்.<br>3. பொதுவான சிறப்பான முறைகளில் கற்பித்தல் பற்றிய முறைகள்<br>4. கணிதம், பொது அறிவியல், சமூகவியல், இவை கற்பிக்கும் முறைகள்.<br>5. மொழிப்பாட நூல்கள். | 1 முதல் 2 வரை இளநிலைக்குரியன.<br>3. கற்பிக்கும் முறைகள், பொது முறைகள், சிறப்பு முறைகள், பொதுமொழி<br>4. கற்பிக்கும் முறைகள், கணிதம், பொது அறிவியல், சமூக இயல்.<br>5. கற்பிக்கும் முறைகள்—ஆங்கிலம். | கல்வித் துறை இயக்குநரின் 14-11-60 நாளிட்ட ஆர். ஸி. எண் 005/எம். 1-65 எண்ணுள்ள நடவடிக்கைக் குறிப்புக்களுடன், கல்வித் துறையின் 3-11-1960 ஆம் நாளிட்ட 2315 ஆம் எண்ணுள்ள அரசு குறிப்பாணையின் நகல் அனுப்பப்பட்டது. |

ஆதாரக் கல்வியில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் மேம்பாடுகள் செய்யும் நோக்குடனும், தற்போதைய தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடனும் இத்திட்டத்தின்படி கீழ்க்காணும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

(1) கணிதம், பொது அறிவியல், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் முறைகள் குறித்த சிறப்புத்தாள் ஒன்று இளநிலை, முதுநிலைப் பயிற்சிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

(2) தமிழ் மொழிக்காக நூறு மதிப்பெண்களுடன் கூடிய தனிப்பட்ட தாள் ஒன்று இளநிலைப் பயிற்சியாளருக்காகத் தயாரிக்கப்பட்டது. விரிவான பாடங்களுக்காகப் பாடநூலொன்றும் வரையறுக்கப்பட்டது.

(3) ஆதாரப் பயிற்சி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வுக்கான விடைத்தாள்கள் அனைத்தும் அரசுத் தேர்வுகளுக்கான ஆணையாளரின் செயலாளரால் ஒருமுகமாகத் தொகுக்கப்பட்டு அதன் பின்னர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உதவித் தேர்வாளர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த நடைமுறை 1961 மார்ச் திங்களில் நடைபெற்ற ஆதாரப் பயிற்சிப் பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்விலிருந்து செயலுக்கு வந்து 1966-ஆம் ஆண்டில் விட்டுவிடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1963-65 ஏப்ரல் ...டம் 1969 | 1. கல்வி உளவியல், சிறுவர் மன ஆய்வு.<br>2. ஆதாரக்கல்வி, பள்ளி நிர்வாகம் பற்றிய கோட்பாடுகள்.<br>3. கற்பிக்கும் முறைகள்:<br>(அ) பொது<br>(இ) கணிதம்<br>(உ) பொதுவியல்<br>(எ) சமூகவியல்.<br>4. வட்டார மொழிப் பாடநூல், முறைகள்.<br>5. ஆங்கில மொழி முறைகள் | 4 பாடங்களும் இளநிலைக் குரியது போலவே. | கல்வித் துறை இயக்குநரின் 20-8-63 நாளிட்ட ஆர். ஸி. எண் 422/எம். 1/62 எண்ணுள்ள நடவடிக்கைக் குறிப்புக்களுடன், கல்வித் துறையின் 11-7-63 ஆம் நாளிட்ட 1654-ஆம் எண்ணுள்ள அரசுக் குறிப்பாணையின் நகல் அனுப்பப்பட்டது. |

...போது செயலிலுள்ள இத்திட்டத்தின்படி (1963 திட்டம்) பொதுவான, சிறப்பான கற்பிக்கும் முறைகளின் கீழ் (1) பொது, ...தம், (3) பொது அறிவியல், (4) சமூகவியல் ஆகிய ஒவ்வொரு பாடம் குறித்தும் அதிக அளவு 50 மதிப்பெண் உள்ள 1½ ...ரத் தனித் தேர்வு வினாத்தாள்களும் பாட நூல்கள் துணைப் பாட நூல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இளநிலை, முதுநிலைப் ...ளுக்காக வட்டார மொழிகளை விரிவாகக் கற்கும் திட்டமும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன.

...னாத்தாட்களின் கால அளவும் அதிகரிக்கப்பட்டது.

...60 மார்ச் திங்களில் நடைபெற்ற ஆதாரப் பயிற்சிப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு வரையில் விடைத்தாள்கள் அந்தந்த ஆதாரப் ... பள்ளி ஆசிரியர்களினாலே மதிப்பிடப்பட்டன. 1961 மார்ச் திங்களில் நடைபெற்ற ஆதாரப் பயிற்சிப் பள்ளியிறுதி வகுப்புத் ...லிருந்து விடைத்தாள்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படும் தேர்வாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன.